DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Calender/ Miscellaneous | : | **CC.No. 283 /2025** |
| Deposition of witness for | : | **எ.ம.சா.1** |
| Name | : | **மணிகண்டன்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day July of 2026

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

புகார்தாரரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தற்போது கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காசோலையாக உள்ள ஆவணம் எனது வங்கி கிளையில் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி காசோலையயில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் எனது கையொப்பம் தான் என்றால் சரிதான். நான் எனது வங்கி கிளையில் திரும்ப கிடைக்கபெறாத காசோலைகளை நிறுத்தி வைக்ககோரி கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தான் இந்த வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றும், மேற்படி காசோலையை கடனை அடைப்பதற்காக கொடுத்தேன் என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு காசோலையை கொடுத்த காரணத்தினால் தான் மேற்படி

காசோலை காணாமல் போனதாக எவ்வித புகாரும் காவல் நிலையத்தில் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் நான் எந்த வித அறிவிப்பையும் பெறவில்லை. நான் முதல் விசாரணையில் கூறியது போல் இரண்டு நபர்களுக்கு Security காக காசோலையை கொடுத்தேன் என்று கூறியுள்ள நபர்களின் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக இரண்டு, மூன்று நபர்களுக்கு காசோலையை கொடுத்ததாகவும், உண்மையில் நான் புகார்தாரருக்கு அவரிடம் இருந்து பெற்ற கடனிற்காக தான் காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை எனக்கு சுமார் 6 வருடங்களாக தெரியும் என்றால் சரிதான். புகார்தாரரின் வீடு எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு சுமார் 6 வருடங்களாக புகார்தாரரை தெரிந்த காரணத்தினால் தான் அவரிடம் சுமார் ரூபாய் 20 லட்சம் கடனாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த காசோலையில் தேதி, ரூபாய், பெயர் ஆகியவை நிறப்பிய பிறகு தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதற்கு என்ன கல்வி தகுதி உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் படிக்காத நபர் கூட ஊராட்சி மன்ற தலைவராக இருக்கலாம். மேற்படி ஊராட்சி வரவு செலவுகளை நான் கையொப்பம் செய்தால் தான் செலவுகள் செய்ய இயலும் என்றால் சரியல்ல, ஊராட்சி செயலர் மற்றும் துணைதலைவர் சேர்ந்து கையொப்பம் செய்ய வேண்டும். நான் கொடுத்த காசோலையானது எனது சொந்த வங்கி கணக்கின் காசோலை என்றால் சரிதான். நான் ஊராட்சியில் நடந்த வேலைக்காக எனது சொந்த வங்கி கிளையில் இருந்த காசோலையை தரவில்லை என்றால் சரியல்ல, சுமார் 5 நபர்களுக்கு காசோலையை கொடுத்துள்ளேன். மேற்படி 5 நபர்களின் தகவலை பற்றி எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் கேட்காததால் அதை பற்றி கூறவில்லை. நான் தான் புகார்தாரரிடம் நான் பெற்ற கடனிற்கு ஆதரவாக இந்த வழக்கின் காசோலையை கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.